රාජ්‍ය මුදල් දෙපාර්තමේන්තුව
அரச நிதித் திணைக்களம்
DEPARTMENT OF PUBLIC FINANCE

අධ්‍යක්ෂ ජනරාල් / பணிப்பாளர் நாயகம் / Director General — Tel. 94-11-2484614, Fax. 94-11-2436337
කාර්යාලය / அலுவலகம் / Office — Tel. 94-11-2484637, Fax. 94-11-2431458

මහා භාණ්ඩාගාරය, මුදල් හා ක්‍රමසම්පාදන අමාත්‍යාංශය, කොළඹ-01, ශ්‍රී ලංකා
பொதுத் திறைசேரி, நிதி திட்டமிடல் அமைச்சு, கொழும்பு-01, இலங்கை.
General Treasury, Ministry of Finance and Planning, Colombo-01, Sri Lanka.

Website: www.pfd.gov.lk
pubfin@pfd.treasury.gov.lk
E-mail:

මගේ අංකය / எனது இல / My No: PFD/PMD/Gen/003
ඔබේ අංකය / உமது இல / Your No:
දිනය / திகதி / Date: 2014.05. 29

செயலாளர்,
அரசாங்க நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சு,

**மாவட்ட பெறுகைக் குழுக்களின் அதிகார எல்லை.**

ஒப்பந்தம் வழங்குவதனைத் தீர்மானிப்பதற்கான பெறுகைக் குழுக்களின் அதிகார எல்லைகள் திருத்தம் செய்யப்பட்டு அரசாங்கததின் பெறுகை வழிகாட்டு நெறிகள் - 2006 க்கு வெளியிடப்பட்ட 2011.01.01 ஆம் திகதிய 20 ஆம் இலக்க மற்றும் 2012.02.23 ஆம் திகதிய 21 ஆம் இலக்க பிற்சேர்ப்புடன் தொடர்புடையதாகும்.

2. மேலே 20 ஆம் இலக்க பிற்சேர்ப்பின் பிரகாரம் திணைக்களப் பெறுகைக் குழுக்களின் அதிகார எல்லைக்குள் வரும் மாவட்ட பெறுகைக் குழுவிற்கு திறந்த போட்டி பெறுகை முறையின் கீழ் உள்நாட்டு நிதியத்தின் மூலம் செய்யப்படும் அரசாங்க அதிபர், மாவட்ட செயலாளர் அலுவலகங்களில் வேலைகள், பண்டங்கள் மற்றும் சேவைகள் பெறுகைக்காக 50 மில்லியன் ரூபா வரையிலும், வெளிநாட்டு நிதியத்தின் மூலம் செய்யப்படும் அவ்வாறான பெறுகைகளுக்கு 150 மில்லியன் ரூபா வரையிலான நிதி எல்லைகளின் கீழ் நடவடிக்கை எடுக்கக் கூடியதாக இருக்கும்.

3. இதுவரையிலும் பல்வேறு வரிசை அமைச்சுக்களினால் அரசாங்க அதிபர் / மாவட்ட செயலாளர் அலுவலகங்களுக்கு விடுவிக்கப்பட்டிருந்த பாரிய ஒதுக்கீட்டுத் தொகையின் கீழ் திவி நெகும, மங்க நெகும, தெயட்ட கிருள போன்ற பெருமளவிலான அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுவதனால் அவற்றுக்கு உரித்துடைய நிர்மாணிப்பு வேலைகள் உட்பட்டதாக ஏனைய பெறுகைகள் தாமதமின்றி தொடர்சியாகச் செய்யப்படுவதற்கு நிலவுகின்ற அதிகார எல்லைகள் திருத்தம் செய்யப்படவேண்டும் என பல வேண்டுகோள்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

4. இந்த நிலைமைகள் கவனத்திற் கொள்ளப்பட்டு உள்நாட்டு நிதியத்தின் மூலம் செய்யப்படும் வேலைகள், பண்டங்கள் மற்றும் சேவைகள் பெறுகைக்காக தற்போது நிலவுகின்ற 50 மில்லியன் ரூபா எல்லையை 100 மில்லியன் ரூபா வரையிலும், வெளிநாட்டு நிதியத்தின் மூலம் செய்யப்படும் வேலைகள், பண்டங்கள் மற்றும் சேவைகள் பெறுகைக்காக தற்போது நிலவுகின்ற 150 மில்லியன் ரூபா எல்லையை 300 மில்லியன் ரூபா வரையில் ஆகும் விதத்தில் மாவட்டப்

பெறுகைக் குழுக்களின் நிதி எல்லைகள் திருத்தம் செய்யப்படுவதற்கான முன்மொழிவொன்று அமைச்சரவைக்குச் சமர்பிக்கப்பட்டுள்ளது.

5. மேலும், மேலே 21 ஆம் பிற்சேர்ப்பின் பிரகாரம் பொருட்கள் வாங்கும் செயல்முறையின் (Shopping Procedure) கீழ் அரசாங்க அதிபர் / மாவட்ட செயலாளர் அலுவலகங்களில் மற்றும் பிரதேச செயலாளர் அலுவலகங்களில் வேலைகள், பண்டங்கள் மற்றும் சேவைகள் பெறுகைக்காக தற்போது நிலவுகின்ற எல்லைகளும் கீழ்க் கண்டவாறு திருத்தம் செய்யப்படுகின்றது.

| அதிகாரம் | | இலங்கை அரசாங்கத்தினால் நிதியிடப்படும் ஒப்பந்தம் | | வெளிநாட்டு நிதியிடப்படும் ஒப்பந்தம் | |
|---|---|---|---|---|---|
| | | தற்போதய எல்லை | திருத்திய எல்லை | தற்போதய எல்லை | திருத்திய எல்லை |
| திணைக்களங்கள் / கருத்திட்டங்கள் பெறுகைக் குழுக்களுக்காக | **வேலைகள்**<br>ஆகக் குறைந்தது வரையறுத்த விலை மனுக்கள் 5 கோருவதனால் | 2 மில்லியன் ரூபா வரை | 10 மில்லியன் ரூபா வரை | 5 மில்லியன் ரூபா வரை | 15 மில்லியன் ரூபா வரை |
| | **பண்டங்கள் மற்றும் சேவைகள்**<br>ஆகக் குறைந்தது வரையறுத்த விலை மனுக்கள் 5 கோருவதனால் | 2 மில்லியன் ரூபா வரை | 10 மில்லியன் ரூபா வரை | 3 மில்லியன் ரூபா வரை | 15 மில்லியன் ரூபா வரை |
| | **பண்டங்கள் மற்றும் சேவைகள்**<br>ஆகக் குறைந்தது வரையறுத்த விலை மனுக்கள் 3 கோருவதனால் | 1 மில்லியன் ரூபா வரை | 5 மில்லியன் ரூபா வரை | 1 மில்லியன் ரூபா வரை | 5 மில்லியன் ரூபா வரை |
| பிரதேச பெறுகைக் குழுக்களுக்காக | **வேலைகள்**<br>ஆகக் குறைந்தது வரையறுத்த விலை மனுக்கள் 5 கோருவதனால் | 1 மில்லியன் ரூபா வரை | 2 மில்லியன் ரூபா வரை | 1 மில்லியன் ரூபா வரை | 2 மில்லியன் ரூபா வரை |
| | **பண்டங்கள் மற்றும் சேவைகள்**<br>ஆகக் குறைந்தது வரையறுத்த விலை மனுக்கள் 5 கோருவதனால் | ரு.500,000 வரை | 1 மில்லியன் ரூபா வரை | ரு. 500,000 வரை | 1 மில்லியன் ரூபா வரை |

6. அமைச்சரவை அங்கீகாரத்தின் கீழ் மேலே திருத்தம் செய்யப்பட்ட எல்லைகளின் பிரகாரம் பெறுகை வழிகாட்டு நெறிகள் எதிர்காலத்தில் நாளதுவரையாக்கப்படும் என்பதுடன் அதுவரையிலும் ஒவ்வொரு மாவட்ட பெறுகைக் குழுக்களின் நடவடிக்கைகள் தடைகளின்றி செய்து கொண்டு போவதற்கு இந்த எல்லைகள் அரசாங்க அதிபர், மாவட்ட செயலாளர் அலுவலகங்களுக்கு 2014.06.01 ஆம் திகதி தொடக்கம் உரித்துடையதாக்கிக் கொள்ளும் படி சகல அரசாங்க அதிபர் ∴ மாவட்ட செயலாளர்களுக்கு அறிவுறுத்தப்படுதல் வேண்டும்.

7. இது சம்பந்தமாக வெளியிடப்பட்டுள்ள 2014.05.28 ஆம் திகதிய கடிதம் இரத்துச் செய்யப்படுகின்றது என்பதுடன் அதற்குப் பதிலாக இந்தக் கடிதத்தை உரித்துடையதாக்கிக் கொள்ளுமாறு அறியத் தருகின்றேன்.

ஒப்பம்: பீ. அல்கம
அரச நிதிப் பணிப்பாளர் நாயகம்.

பிரதிகள் :- சகல மாவட்ட செயலாளர்கள்